# விபர மடல்

2010 புரட்டாதி

## 7-ம் வகுப்பு மாணவர்களுக்கான ஈரல் அழற்சி-B தடுப்பூசி மருந்து

(இவ்விபர மடல் பல மொழிகளில் கிடைக்கும்; பார்க்கவும்: http://www.toronto.ca/health/immunization_children/index.htm)

### ஈரல் அழற்சி-B என்றால் என்ன?

- ஈரலில் நச்சுயிரி பீடிப்பது ஈரல் அழற்சி எனப்படும். ஆண்டுதோறும் கனடியரைப் பீடிக்கும் தொடக்கநிலை ஈரல் புற்றுநோய் வகைகளுள் 75 வீதமானவையும், 100 இறப்புகளும் இதனால் விளைபவை.
- மனித தடுப்புவலு தேய்வு நச்சுயிரியை (HIV-ஐ) விட ஈரல் அழற்சி- B நச்சுயிரி 100 மடங்கு அதிகம் பீடிக்கவல்லது. இது புறங்களில் நாட்கணக்காக வாழ்ந்து, பீடிக்கக்கூடிய நச்சுயிரி.
- தடுப்பூசி மருந்து கொண்டு ஈரல் அழற்சி- B நோயைத் தடுக்க முடியும்.

### ஈரல் அழற்சி-B ஒருவரை எவ்வாறு பீடிக்கக்கூடும்?

- ஈரல் அழற்சி-B நச்சுயிரி பீடித்த ஒருவரின் குருதியுடன் அல்லது உடற்கசிவுகளுடன் ஏற்படும் தொடர்பினால் இந்நோய் பரவுகிறது.
- பின்வரும் வழிகளில் இது பரவக்கூடும்:
  - பல்விளக்கி, சவர அலகு, நகம் அராவி, மற்றும் பிற உடற்பராமரிப்பு உபகரணங்களை ஆள்மாறிப் பயன்படுத்தல்;
  - குருதி கலந்த உமிழ்நீர்த் தொடர்பு ஏற்படும் வகையில் மனிதர் கடித்தல்;
  - இந்நச்சுயிரி பீடித்த ஒருவருடன் உடலுறவு கொள்ளல்;
  - அழுக்கடைந்த போதை-ஊசிகளை ஆள்மாறிப் பயன்படுத்தல் அல்லது அழுக்கடைந்த உபகரணங்களைக் கொண்டு பச்சை குத்துதல் அல்லது உடலில் துளையிடுதல்.
- நச்சுயிரி பீடித்த ஒரு தாயிடமிருந்து கருப்பையில் இருக்கும் அல்லது பிறக்கும் குழந்தைக்கு அது தொற்றக்கூடும்.

### ஈரல் அழற்சி-B நோய்க்கு உள்ளாகும் ஆபத்து யாருக்கு ஏற்படும்?

- ஈரல் அழற்சி-B நச்சுயிரி எந்த வயதினரையும் பீடிக்கக்கூடியது.
- சில பிரிவினரை இது பீடிக்கும் ஆபத்து அதிகம் (எடுத்துக்காட்டு: சுகாதார பராமரிப்பு பணியாளர்கள், ஈரல் அழற்சி-B நச்சுயிரி பீடித்த ஒருவரின் குடும்பத்தவர்கள்).

### ஈரல் அழற்சி-B நோயின் அறிகுறிகள் எவை?

- இந்நச்சுயிரி தொற்றுவோருள் அரைவாசிக்கு மேற்பட்டோரில் அறிகுறிகள் எவையும் தென்படுவதில்லை. அவர்களை நச்சுயிரி பீடிப்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. எனினும் அவர்களிடமிருந்தும் இந்நச்சுயிரி பிறருக்குத் தொற்றக்கூடும்.
- அடிக்கடி நச்சுயிரி வகைகளால் பீடிக்கப்படும் இளம் பிள்ளைகளில் அறிகுறிகள் தென்படுவதில்லை.
- யாரில் அறிகுறிகள் தென்படுகின்றனவோ அவர்களுக்கு களைப்பும், காய்ச்சலும் ஏற்படும், பசிக்காது, சிலவேளைகளில் கண்களும் தோலும் மஞ்சள் நிறமாகும், சிறுநீர் தடித்த நிறத்தில் கழியக்கூடும்.
- சிலர் ஈரல் அழற்சி-B நச்சுயிரியால் பீடிக்கப்பட்டு, மிகவும் நோய்வாய்ப்படுவர். அவர்களுக்கு ஈரல் வியாதிகள் ஏற்படுவது வழக்கம். அவர்கள் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைக்கு உள்ளாக நேரும்.

### ஒருவரை ஈரல் அழற்சி-B நச்சுயிரி பீடிப்பதால் என்ன விளையக்கூடும்?

- ஈரல் அழற்சி-B நச்சுயிரி பிள்ளைகளைப் பீடித்தால், அதன் பீடிப்பு நீடித்து, எதிர்காலத்தில் ஈரல் வியாதிகள் ஏற்பட வாய்ப்புண்டு. பிற்காலத்தில் அவர்களுக்குப் புற்றுநோய் உண்டாகக் கூடும்.
- வயது வந்தவர்களுள் 95 வீதமானோரின் உடல், நச்சுயிரி பீடிப்பதைச் சுயமாகவே எதிர்த்து, வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பளிக்கும்.
- வயது வந்தவர்களைப் பொறுத்தவரை நச்சுயிரியால் பீடிக்கப்படுவோருள் 5 முதல் 10 வீதமானோரை அது நீடித்துப் பீடிக்கும்.
- ஈரல் அழற்சி-B நச்சுயிரி பீடித்த 100 பேருள் ஒருவர், அதனால் இறக்க நேர்கிறது.

### எனது பிள்ளைக்கு ஈரல் அழற்சி- B ஏற்படாமல் பாதுகாப்பது எப்படி?

- உங்கள் பிள்ளைக்கு ஈரல் அழற்சி-B தடுப்பூசி ஏற்றுவிக்கவும். ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை (TPH) 7-ம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக ஈரல் அழற்சி-B தடுப்பூசி ஏற்ற முன்வந்துள்ளது.
- கனடாவில் இத்தடுப்பூசி 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மிகவும் பாதுகாப்பானது.
- இரண்டு தடவைகள் தடுப்பூசி ஏற்றும் 7-ம் வகுப்பு மாணவர்களுள் 99 வீதமானோருக்கு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்புக் கிடைக்கிறது.

**யாரால் ஈரல் அழற்சி-B தடுப்பூசியை இலவசமாக ஏற்ற முடியும்?**

- 7-ம் வகுப்பு மாணவர்கள் ஈரல் அழற்சி-B தடுப்பூசியை இலவசமாக ஏற்றலாம்.
- 7-ம் வகுப்பில் இத்தடுப்பூசியை ஏற்றத் தவறிய 8-ம் வகுப்பு மாணவர்கள், பாடசாலைச் சிகிச்சைக் களம் அல்லது சமூக சிகிச்சைக் களம் ஒன்றில் தடுப்பூசி ஏற்றலாம். ரொறன்ரோ சுகாதாரத் துறையின் இணையத்தளம் சென்று, சிகிச்சைக் களம் கூடும் திகதிகளையும், நேரங்களையும் நிச்சயிக்கவும்.
- ஈரல் அழற்சி-B பீடிக்கும் ஆபத்தை அதிகம் எதிர்நோக்குவோரும் இலவச தடுப்பூசி ஏற்றலாம்.

**யார் ஈரல் அழற்சி-B தடுப்பூசி ஏற்றக் கூடாது?**

- உங்கள் பிள்ளைக்கு:
  - ஏற்கெனவே இந்நச்சுயிரிக்கான தடுப்பூசி (Twinrix®, Engerix-B®, Recombivax HB®) ஏற்றியிருந்தால்;
  - ஏற்கெனவே ஈரல் அழற்சி-B நச்சுயிரி பீடித்திருந்தது என்றால்;
  - முன்னர் ஈரல் அழற்சி-B தடுப்பூசி ஏற்றியபொழுது தகாத விளைவு அல்லது வேறொரு தடுப்பூசி ஏற்றியபொழுது கடுமையான விளைவு எதுவும் ஏற்பட்டிருந்தால்;
  - மதுவம் (yeast), அலுமினியம், latex formaldehyde, 2-phenoxyethanol, (சில தடுப்பூசி வகைகளில் காணப்படும்) thimerosal எதுவும் ஒவ்வாது என்றால்,

  இத்தடுப்பூசியை ஏற்றக் கூடாது.
- உங்கள் பிள்ளைக்கு காய்ச்சல் அல்லது சிறிதளவு தடிமனை விஞ்சிய கடுமையான சுகயீனம் எதுவும் ஏற்பட்டிருந்தால், பிள்ளை குணமடையும் வரை பொறுத்திருந்த பின்னரே தடுப்பூசி ஏற்ற வேண்டும்.

**இத்தடுப்பூசி ஏற்றுவதால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் எவை?**

- சிலருக்கு தடுப்புசி ஏற்றிய இடம் சிவக்கவும் வீங்கவும் கூடும். சிலருக்கு தடுப்பூசி ஏற்றிய பின்னர் களைப்பும் சற்று காய்ச்சலும் ஏற்படலாம்.
- மூச்சுவிடுவதில் சிரமம், தொண்டையிலும் முகத்திலும் பரு அல்லது வீக்கம் உட்பட்ட பக்க விளைவுகள் அரிதாக ஏற்படுவதுண்டு.
- தடுப்பூசி ஏற்றிய பின்னர் கடுமையான விளைவு எதுவும் ஏற்பட்டால், உடனடியாக சுகாதார பராமரிப்பாளர் ஒருவரிடம் செல்லவும்.
- பாடசாலைச் சிகிச்சைக் களங்களில் ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் தாதியாளர்கள் சமுகமளித்திருப்பார்கள். அவர்கள் கடுமையான விளைவுகளைக் கையாளப் பயிற்றப்பட்டவர்கள்.

**ஈரல் அழற்சி-B தடுப்பூசி பற்றி நான் வேறென்ன அறிந்திருக்க வேண்டும்?**

- 11 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களின் முழுப் பாதுகாப்புக்கு (4 முதல் 6 மாதங்கள் வரை இடைவிட்டு) ஈரல் அழற்சி-B தடுப்பூசி இரண்டு தடவைகள் ஏற்ற வேண்டும்.
- ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் (TPH) பணியாளர்கள் இலையுதிர் காலத்தில் அல்லது குளிரகாலத்தில் ஒரு தடவையும், வசந்தகாலத்தில் ஒரு தடவையும் உங்கள் பிள்ளையின் பாடசாலைக்கு வருவார்கள்.
- எல்லா வயதினருக்கும் ஈரல் அழற்சி-B தடுப்பூசி மூன்று தடவைகள் ஏற்றப்படுகின்றன.
- ஏற்கெனவே உங்கள் பிள்ளைக்கு தடவைக்குத் தடவை ஈரல் அழற்சி-B தடுப்பூசி (Twinrix®, Engerix-B®, Recombivax HB®) ஏற்றப்பட்டிருந்தால், உங்கள் பிள்ளையின் மருத்துவப் பதிவேட்டு விபரங்களைப் புதுப்பிக்கவும்:
  - இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சம்மதப் படிவத்தில் அவ்விபரங்களை இட்டு நிரப்பவும் <u>அல்லது</u>
  - தடுப்புமருந்தீட்டு தகவல் இணைப்பை அழைத்து, உங்கள் பிள்ளையின் மருத்துவப் பதிவேட்டு விபரங்களைப் புதுப்பிக்கவும்: 416-392-1250.

**எனது பிள்ளைக்கு ஒரே சமயத்தில் இரு தடுப்பூசிகளை ஏற்றுவது பாதுகாப்பானதா?**

- பதின்ம வயதினருக்கென விதந்துரைத்த (தண்டுமூளை நோய், HPV, ஈர்ப்புவலி-தொண்டைக்கரப்பான்-குக்கல் உந்தூசி போன்ற) வேறு தடுப்பூசிகளை ஏற்றும் அதே சமயத்தில் ஈரல் அழற்சி-B தடுப்பூசி ஏற்றுவது பாதுகாப்பானதே.

**மேலதிக விபரங்களை நான் எங்கே பெற்றுக் கொள்ளலாம்?**

- ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள "Take Your Best Shot" காணொலிப்படம் பார்க்கவும்: (http://www.toronto.ca/health/cdc/grd7_hepb_men/best_shot_dvd.htm)
- இலவசமாக ஈரல் அழற்சி-B தடுப்பூசி ஏற்றத் தகுதி உடையோர் வேறு யார் என்பதை வாசித்தறியவும்: http://www.toronto.ca/health/cdc/factsheets/hep_b_factsheet.htm
- ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் தடுப்புமருந்தீட்டு தகவல் இணைப்பை அழைக்கவும்: 416-392-1250.